**பிப்ரவரி – 01**

# TNPSC துளிகள்

- ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளின் மத்திய வங்கிகள் இணைந்து அபேர் என்ற ஒரு பொதுவான டிஜிட்டல் நாணயத்தை வெளியிட இருக்கின்றன. இது இரு நாடுகளுக்கும் இடையே தொடர் சங்கிலி மற்றும் விநியோகிக்கப்படும் பேரேடுத் தொழில்நுட்பம் ஆகியவற்றின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற நிதியியல் தீர்வுகளுக்குப் பயன்படுத்தப்படும்.
- வயநாடு மாவட்ட நிர்வாகம் குரங்குக் காய்ச்சல் என்று அழைக்கப்படும் கியாசானூர் காட்டு நோய்கள் (Kyasanur Forest Disease - KDF) வயநாட்டில் இருவருக்கு இருப்பதாக தெரிவித்திருக்கின்றது.
    - இந்த வைரசானது பொதுவாக குரங்குகளில் காணப்படும் ஒட்டுண்ணிகள் மூலமாக மனிதர்களுக்குப் பரவும்.
- மூத்த வெளியுறவுத் துறை அதிகாரியான சஞ்சய் சுதிர் மாலத்தீவுகளுக்கான இந்தியாவின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மூத்த அரசுத் துறை அதிகாரியான ராஜீவ் நயன் சௌபே மத்தியப் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் (Union Public Service Commission - UPSC) உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். அதன் தலைவர் அரவிந்த் சக்சேனா அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

# தேசியச் செய்திகள்

## இடைக்கால சிபிஐ தலைவர் வழக்கு

- உச்சநீதிமன்ற நீதிபதி A.K. சிக்ரி, சிபிஐயின் இடைக்கால இயக்குநராக ஐபிஎஸ் அதிகாரியான M. நாகேஸ்வர ராவை நியமித்தது தொடர்பான பொதுநல வழக்கை விசாரிப்பதிலிருந்து தன்னைத் தானே விடுவித்துக் கொண்டுள்ளார்.
- புதிய சிபிஐ தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உயர்மட்டத் தேர்வுக் குழுவில் பங்குபெற இருந்ததால் இந்தியாவின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாயும் இவ்வழக்கிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதற்குப் பிறகு இவ்வழக்கு நீதிபதி A.K. சிக்ரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ராக் ராக் மெய்ன் கங்கா

- மத்திய நீர்வளத் துறை, நதி மேம்பாடு மற்றும் கங்கைப் புனரமைப்பு அமைச்சர் நிதின் கட்காரி தூர்தர்ஷனில் ராக் ராக் மெய்ன் கங்கா என்ற பயணக் கட்டுரையையும் மேரி கங்கா என்ற கேள்வி பதில் நிகழ்ச்சியையும் தொடங்கி வைத்தார்.
- இந்நிகழ்ச்சி கங்கை நதியைப் புத்துயிரூட்டுவதற்கான தேவை பற்றிய செய்தியையும் அந்நதியை சுத்தப்படுத்த அரசு எடுத்து வரும் முயற்சிகளைப் பற்றிய தகவலையும் ஒரு புதுமையான மற்றும் சுவாரசியமான முறையில் ஒளிபரப்பியது.

# சர்வதேசச் செய்திகள்

## உரிமையியல் நீதிபதி – முதன்முதலாக இந்துப் பெண்மணி

- பாகிஸ்தானில் உரிமையியல் நீதிபதியாக நியமிக்கப்பட இருக்கும் முதல் இந்துப் பெண்மணியாக சுமன் குமாரி உருவெடுத்திருக்கின்றார்.
- 2005-2007 ஆகிய ஆண்டுகளில் பாகிஸ்தானில் நீதிபதியாக பணியாற்றிய நீதிபதி ராணா பகவன்தாஸ் என்பவரே இந்துச் சமுதாயத்தைச் சேர்ந்த முதல் நீதிபதி ஆவார்.
- 2018 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் சட்டமன்றத்தில் ஒரு இடத்தை வென்ற முதல் முஸ்லீம் அல்லாத பெண்மணி கிருஷ்ண குமாரி கோலி ஆவார்.

## பருவநிலை மற்றும் நீடித்த மேம்பாட்டிற்கான ஆப்பிரிக்க மையம்

- இத்தாலிய பிரதம மந்திரி கியுசெப்பி காண்டி ரோம் நகரத்தில் பருவநிலை மற்றும் நீடித்த மேம்பாட்டிற்கான ஆப்பிரிக்க மையத்தைத் திறந்து வைத்திருக்கின்றார்.
- இந்த மையம் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் (UN Development Programme - UNDP) மற்றும் உணவு விவசாய அமைப்பு (Food & Agricultural Organisation - FAO) ஆகியவற்றுடன் இணைந்து இத்தாலிய அரசால் நிறுவப்பட்டிருக்கின்றது.
- இந்த மையம் பாரீஸ் ஒப்பந்தத்தாலும் 2030 தீர்மானத்தாலும் ஏற்படுத்தப்பட்ட இலக்குகளை அடைய G7 நாடுகள் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் பொதுவான முயற்சிகளுக்கான ஒத்துழைப்பை நல்கும்.

## ஊழல் கண்ணோட்ட அறிக்கை 2018

- சமீபத்தில் ஊழல் எதிர்ப்பு அமைப்பான டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நேஷனல் அமைப்பால் (Transparency International) 2018 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய ஊழல் கண்ணோட்ட அறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்த 2018 ஆம் ஆண்டிற்கான ஊழல் கண்ணோட்ட அறிக்கையில் இந்தியா தனது நிலையை 3 புள்ளிகளுக்கு மேம்படுத்தி 41 புள்ளிகளுடன் 78-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- 100 புள்ளிகளுக்கு 88 புள்ளிகளைக் குவித்து டென்மார்க் உலகின் மிகக் குறைவான ஊழல் கொண்ட நாடாகவும் அதனைத் தொடர்ந்து நியூசிலாந்தும் பின்லாந்தும் உள்ளன.
- சோமாலியா 10 புள்ளிகளுடன் கடைசி இடத்திலும் அதனையடுத்து தெற்கு சூடான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளும் உள்ளன.
- இந்த அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து முதன்முறையாக அமெரிக்கா முன்னணி 20 இடங்களிலிருந்து சரிந்து 22-வது இடத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- பிரேசிலுடன் அமெரிக்காவும் இணைக்கப்பட்டு கண்காணிப்புப் பட்டியலில் அவை டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நேஷனல் அமைப்பால் வைக்கப்பட்டுள்ளன.
- 1995 ஆம் ஆண்டு முதல் டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நேஷனல் அமைப்பின் ஒரு

தனித்துவ ஆராய்ச்சித் தயாரிப்பான இந்த அறிக்கை பொதுத்துறை ஊழலின் உலகளாவிய முன்னணி சுட்டியாக உருவெடுத்திருக்கின்றது.

**TI CORRUPTION PERCEPTIONS INDEX 2018**

BANGLADESH'S POSITION IN SOUTH ASIA

| COUNTRY | RANK FROM TOP | SCORE |
|---|---|---|
| Bhutan | 25 | 68 |
| India | 78 | 41 |
| Sri Lanka | 89 | 38 |
| Pakistan | 117 | 33 |
| Maldives | 124 | 31 |
| Nepal | 124 | 31 |
| Bangladesh | 149 | 26 |
| Afghanistan | 172 | 16 |

**GRAFT INDEX: TOP FIVE, BOTTOM FIVE**

| LEAST CORRUPT | MOST CORRUPT |
|---|---|
| Denmark | Somalia |
| New Zealand | Syria |
| Finland | South Sudan |
| Singapore | Yemen |
| Sweden | North Korea |

# சுற்றுச்சூழல் செய்திகள்

## தூய்மையான காற்றுக்கான தேசியத் திட்டம்


- ஒரு புதிய ஆய்வில் டெல்லி காற்று மாசானது 25 சதவிகித அளவிற்கு குறைக்கப்பட்டால் டெல்லியில் உள்ள மக்களின் வாழ்நாள் ஆயுட்காலமானது ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் அதிகரிக்கும் என்று தூய்மையான காற்றுக்கான தேசியத் திட்டம் தெரிவித்திருக்கின்றது.
- தூய்மையான காற்றுக்கான தேசியத் திட்டம் என்பது அடுத்த ஐந்து வருடங்களில் காற்றின் தரத்தை 20 முதல் 30 சதவிகிதம் அளவிற்கு உயர்த்திட மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்டிருக்கின்றது.
- இத்திட்டம் 2017 ஆம் ஆண்டை காற்றின் தரத்தை உயர்த்துவதற்காக அடிப்படை ஆண்டாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றது.

## கையகப்படுத்தப்பட்டுள்ள யானைகளின் முதல் கணக்கெடுப்பு

- கையகப்படுத்தப்பட்டுள்ள யானைகளின் முதல் கணக்கெடுப்பின் தகவல்கள் ஒரு பிரமாணப் பத்திரமாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.
- இந்த பிரமாணப் பத்திரத்தின்படி, 2454 யானைகள் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும்

அதில் 560 யானைகள் வனத்துறையிடமும் 1687 யானைகள் தனிநபர்களிடமும் உள்ளதாக தெரிய வந்துள்ளது.

- நாடு முழுவதும் இந்த வகையில் உள்ள மொத்தம் 2454 யானைகளில் அசாமும் கேரளாவும் பாதிக்கும் மேற்பட்ட அளவிற்குக் கொண்டிருக்கின்றன.
    - இந்த கையகப்படுத்தப்பட்டுள்ள யானைகளில் அசாம் 37 சதவிகிதமும் கேரளா 21 சதவிகிதமும் கொண்டிருக்கின்றன.




## ஆர்க்டிக்கில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சூப்பர்பக்

- இந்தியாவில் முதலில் கண்டறியப்பட்ட ஆன்டிபயாடிக் எதிர்ப்பைக் கொண்ட சூப்பர்பக் மரபணுவானது உலகின் கடைசியான அச்சு அசலான இயற்கையைக் கொண்ட பிரதேசங்களில் ஒன்றான ஆர்க்டிக்கில் கண்டறியப்பட்டிருக்கின்றது.
- இக்கண்டுபிடிப்பு உலகளாவிய ஆன்டிபயாடிக் எதிர்ப்பின் பரவுதலுக்கான மிகப்பெரிய விளைவுகளைக் கொண்டிருக்கின்றது.
- ஸ்வால்போர்டு பகுதியில் எடுக்கப்பட்ட மண் மாதிரிகள் blaNDM-1 (New Delhi Metallo-beta-lactamase-1) என்று அறியப்படும் புதுதில்லி மெத்தலோ பீடா லாக்டமாஸ் 1 என்ற மரபணு ஆர்க்டிக் பிராந்தியத்தின் உயர்பகுதியில் பரவி இருப்பதை தற்போது உறுதிப்படுத்தியிருக்கின்றன.
- ஸ்வால்போர்டு என்பது வடதுருவத்திற்கும் நார்வேயின் மையநிலப்பகுதிக்கும் நடுவேயுள்ள, நார்வே நாட்டைச் சார்ந்த ஒரு தீவுக்கூட்டமாகும்.
- இந்த ஆன்டிபயாடிக் எதிர்ப்பு மரபணுவானது நுண்ணுயிரிகளில் பல மருந்து எதிர்வினையை ஏற்படுத்துகின்றது.
- பலவகைப்பட்ட பாக்டீரியாக்களில் எதிர்ப்புத் தன்மையை அளிக்கும் புரதமான NDM-1 என்பது இதற்கு உதாரணமாகும்.

# மாநிலச் செய்திகள்

## குழந்தைகள் இறப்பைத் தடுக்க சிறப்புத் திட்டம் - மகாராஷ்டிரா

- மகாராஷ்டிரா மாநில அரசானது குழந்தைகள் இறப்பைத் தடுப்பதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கின்றது.
- இத்திட்டம் ஆரம்ப சுகாதார மையங்களிலும் அரசு மருத்துவமனைகளிலும் பிறந்துள்ள குழந்தைகளுக்கு உடல்நலம் காப்பதற்கான உபகரணங்களை வழங்கி ஆரம்பிக்கப்பட்டது.
- இத்திட்டம் பெற்றோர்களின் முதல் குழந்தைக்கு மட்டுமே பொருந்தும்.
- ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பே குழந்தை இறப்பு விகிதமாகும்.

## முதல் செயற்கைத் தரை விரிப்பு கால்பந்து மைதானம் - நாகாலாந்து

- நாகாலாந்து முதல்வர் நெய்பியு ரியோ நாகாலாந்தின் கோஹிமாவில் உள்ள இந்திரா காந்தி மைதானத்தில் முதலாவது செயற்கைத் தரைவிரிப்பு கால்பந்து மைதானத்தைத் துவக்கி வைத்தார்.
- இந்த மைதானம் பழம்பெரும் கால்பந்து வீரரான டாக்டர் T. ஏஓ என்பவரது 100வது பிறந்த தின அனுசரிப்பு நிகழ்ச்சியில் துவக்கி வைக்கப்பட்டது.
- செயற்கைத் தரை விரிப்பு என்பது ஒரு மைதானத்திற்கு பிபா அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட அளவான 105x66 மீட்டர்கள் என்ற அளவைக் கொண்டிருக்கின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## BARC இந்தியாவின் புதிய தலைவர்

- பார்வையாளர் ஒளிபரப்பு ஆராய்ச்சிக்கான இந்தியக் குழுவின் (Broadcast Audience Research Council of India – BARC) புதிய தலைவராக ஜீ பொழுதுபோக்கு நிறுவனத்தின் மேலாண் இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியுமான புனித் கோயங்கா நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
- BARC அமைப்பின் ஒரு நிறுவனத் தலைவராக புனித் கோயங்கா அந்த அமைப்பை நிறுவனப்படுத்துதலில் முக்கியப் பங்கு ஆற்றியிருக்கின்றார்.
- ஒளிபரப்பாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் விளம்பரதார ஊடக நிறுவனங்கள் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளால் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட BARC இந்தியா ஒரு தொழிற்துறை சார்ந்த ஒத்துழைப்பு நிறுவனமாகும்.
- BARC இந்தியா தொலைக்காட்சி உள்ள 197 மில்லியன் வீடுகளில் சந்தாதாரர்களின் பழக்க வழக்கங்களை ஆய்வு செய்கின்றது. இந்த வகையில் இது தொலைக்காட்சி வாடிக்கையாளர்களை ஆய்வு செய்யும் உலகின் மிகப்பெரிய சேவையாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## டாடா ஸ்டீல் மாஸ்டர்ஸ்

- நெதர்லாந்தில் விஜிக் ஆன் ஜீ நகரில் நடைபெற்ற டாடா ஸ்டீல் மாஸ்டர்ஸ் சதுரங்கப் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்த் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.
- மேக்னஸ் கார்ல்சென் சாம்பியன் பட்டத்தை வென்றார். அனிஸ் கிரிக்கு எதிரான போட்டியில் அவர் வெற்றி தோல்வி எதுவுமின்றிப் போட்டியை முடித்ததன் மூலம் இது அவரது 7-வது டாடா ஸ்டீல் சதுரங்கப் பதக்கமாகும்.
- அனிஸ் கிரி இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

- - - - - - - - - - - - - - -